1992 பிப்ரவரி 10]

அபிவிருத்திக் கவுன்சில் போன்றவைகளில் பேசுவதைக் குறிப்பெடுத்து அதனுடைய அடிப்படையில் திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே திட்டங்கள் பொதுவாக வகுக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டத்தையும் பொறுத்த வரையில் எந்தெந்த வகைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது, எதையெதை எந்தெந்த மாவட்டத்திலே ஏற்றுக் கொள்வது என்று மாவட்ட அளவிலே நம்முடைய திட்டக் குழு நிறைவேற்றுகிறது. உதாரணத்திற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 176 கோடி மின் சக்திக்காக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களைத் தழுவிய வகையிலேதான் நிறைவேற்றப்படுகிறது. அதைப் போலவே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2550 கோடி என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இந்த ரூ. 2550 கோடியை இந்த மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களுடைய தேவையைக் கருதி, அவசியத்தைக் கருதி ஆங்காங்கே எவ்வளவு ஒதுக்கீடு செய்வது என்பதை மாநில திட்டக் குழு மனதிலே வைத்துக் கொண்டுதான் திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 106. திரு. ம. தனபால். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106—

திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 413—திரு. ம. தனபால்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படும் மருத்துவ மனையை அரசினர் பொது மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 107, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

107—

பச்சையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 1317—திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதியிலுள்ள கீழத்திடியூர் அருகே பச்சையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் கிளியூர் கிராமத்திற்கும், மேலத்தூர் கிராமத்திற்கும் இடையில் பச்சையாறு ஓடுகிறது. மழைக் காலங்களில், வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் இது ஒரு தனி தீவாகக் காட்சியளிக்கிறது. அந்த நேரத்தில் பள்ளி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. குறிப்பாக தாய்மார்கள் மகப்பேறு காலத்தில் மருத்துவ உதவிக்குச் செல்ல முடியாமல் தவிக்கிறார்கள். எனவே, தாய் உள்ளம் கொண்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு இப்பகுதி மக்களின் குறைகளைப் போக்க அங்கே ஒரு பாலம் அமைக்க ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.